வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 12.09.2025 வெள்ளிக்கிழமை இதழ் : 255 பக்கங்கள் : 08

# நீதியாக நடந்தால் சர்வதேச விசாரணையை தடுப்பது ஏன்?

## சிறீதரன் எம்.பி. அரசிடம் கேள்வி



கொழும்ப, செப்ரெம்பர் 12

நீதியின்படி நடந்தவர்கள் எனில் அரசாங்கம் வெளியக (சர்வதேச) விசாரணைக்கு ஏன் தயாராகக்கூடாது? வெளியக விசாரணையை ஏன் தடுக்கவேண்டும்? - இவ்வாறு கேள்விகளை எழுப்பியுள்ளார் இலங்கை தமிழ் அரசு கட்சியின் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன்.


மேலும், வெளியக விசாரணையை ஏற்றுக் கொள்ளும் வரையிலும் நீதி - நல்லிணக்கம் - சமாதானம் என்பன எப்போதும் ஏற்படாது என்றும் அவர் கூறினார்.

நேற்றைய தினம் பாராளுமன்றில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

நிமலராஜன், அற்புதன், நிக்லஸ் உள்ளிட்ட பலரை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி படுகொலை செய்தது என்று சதா என்று அறியப்பட்ட அந்தக் கட்சியின் உறுப்பினர் சுப்பையா பொன்னையா ஊடக சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார்.

நிமலராஜன் போன்றவர்களின் கொலைகள் மூடி மறைக்கப்பட்டன. இசைப்பிரியா இராணுவத்தால் மிக மோசமாகப் படுகொலை செய்யப்பட்டார்.

07



# உள்நாட்டு பொறிமுறையில் பொறுப்புக்கூறலுக்கு தயார்

### மனித உரிமைகள் ஆணையரிடம் மீளவும் தெரிவித்தது இலங்கை!

ஜெனிவா, செப். 12

மனித உரிமைகள் பேரவையின் தொழில்நுட்ப உதவியுடன் உள்நாட்டுப் பொறிமுறை மூலம் மனித உரிமைகள் மீறலுக்கு பொறுப்புக்கூறல் செயல்முறையில் ஈடுபட அரசாங்கம் தயாராக உள்ளது என்று மீண்டும் வலியுறுத்தியுள்ளார் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத்.

ஜெனிவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான ஆணையாளர்வோல்கர் டர்க்கை

07

# உள்ளக, கலப்பு பொறிமுறையை முற்றாக நிராகரிக்க வேண்டும்!

### மனித உரிமைகள் உறுப்பு நாடுகளிடம் 69 புலம்பெயர் அமைப்புகள் கோரிக்கை

ஜெனிவா, செப். 12

இலங்கையில் நடந்த இனப்படுகொலை, மனித உரிமைகள் மீறல் என்பவற்றுக்கு நீதி - தீர்வு காண்பதற்கு உள்ளக மற்றும் கலப்பு பொறிமுறையை முற்றாக நிராகரிக்க வேண்டும் என்று 69 புலம்பெயர் தமிழர் அமைப்புகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகளை கோரியுள்ளன.

இது தொடர்பில் அந்த அமைப்புகள் எழுதிய கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

பொறுப்புக்கூறலுக்கான ஆக்கபூர்வமான செயல்முறையை இலங்கை அரசாங்கத்திடம் வலியுத்துவதன் மூலம் ஐ. நா.

07

# சந்திரசேகருக்கு சவால் விடுத்த அர்ச்சுனா

கொழும்பு, செப். 12

மீன்பிடித் துறை அமைச்சராக சந்திரசேகர் வந்தபின் கரைவலை மற்றும் சுருக்குவலை போன்ற சட்டவிரோத செயல்பாடுகள் தொடர்பில் எடுத்த நடவடிக்கை என்ன? நீங்கள் செய்த ஊழல்களை நான் வெளிப்படுத்தினால்

07

# குழப்பங்களால் 10 நிமிடம் ஒத்திவைக்கப்பட்டது சபை!

### தகாத சொல்லை பிரயோகித்த சபை முதல்வர்

கொழும்பு, செப். 12

பாதுகாப்பு பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணை நிராகரிகப்பட்டமை தொடர்பில் நேற்று வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் எழுந்த கூச்சல் குழப்பங்களால் சபை அமர்வு 10 நிமிடங்கள் ஒத்திவைக்கப்பட்டது.

பிரதி அமைச்சருக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையை நிராகரித்த சபாநாயகரின் காரணத்துக்கான சட்ட மா அதிபரின் அறிக்கை, பாரளுமன்ற செயலாளரின் பணியாள் தொகுதி அறிக்கையை சபைக்கு சமர்ப்பிக்குமாறு கோரியே எதிர்க்கட்சியினர்

07

# ஆரம்பித்த இடத்துக்கே தந்தை திரும்பியுள்ளார்

### நாமல் ராஜபக்ஷ சொல்கிறார்

கொழும்பு, செப். 12

தனது தந்தை மகிந்த ராஜபக்ஷ ஆரம்பித்த இடத்துக்கே மீளவும் திரும்பியுள்ளார் என்று பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பு - விஜயராமை மாவத்தை இல்லத்தில் இருந்து மகிந்த ராஜபக்ஷ நேற்று வெளியேறி தனது சொந்த இடமான தங்காலைக்கு சென்றிருந்தார். இந்த நிலையில், நேற்று நாமல் ராஜபக்ஷ தனது எக்ஸ் தளத்தில் இட்ட பதிவில், “இன்று, என் தந்தை கொழும்பில் உள்ள உத்தியோகபூர்வ இல்லத்தை

07



# அரச இல்லத்திலிருந்து வெளியேறினார் மகிந்த

### வழியனுப்ப சீன தூதரும் வருகை

கொழும்பு, செப். 12

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கொழும்பு - விஜயராமை மாவத்தையில் வசித்த உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து நேற்று வெளியேறினார்.

அவர் வெளியேறியபோது, சீனத் தூதுவர் மற்றும் இராஜதந்திரிகள், அரசியல்வாதிகள், ஆதரவாளர்கள் எனப் பலர் அவரின் இல்லத்தில் கூடியிருந்தனர். மகிந்த ராஜபக்ஷ உத்தியோகபூர்வ வீட்டிலிருந்து வெளியேறுகிறார் என்ற தகவல் பரவியதையடுத்தே அவர்கள் அங்கு கூடியிருந்தனர்.

அங்கிருந்து வெளியேறிய அவர் தனது

07

# போதைப் பொருட்களுடன் இளைஞர்கள் இருவர் கைது

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், செப். 12

நேற்றைய தினம் ஹெரோயின், கஞ்சா கலந்த மாவாவுடன் இளைஞர்கள் இருவர் யாழ்ப்பாணத்தில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இணுவில் பகுதியில் ஹெரோயின் போதைப்பொருளுடன் இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 110 மில்லிகிராம் ஹெரோயின் மீட்கப்பட்டது. யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் புலனாய்வு பிரிவுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில்

07

# “மகிந்தவுக்கு வீடு வழங்க தமிழர் ஒருவரும் தயார்”

கொழும்பு, செப். 12

“முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு கொழும்பில் வீடு வழங்க தமிழர் ஒருவர் உட்பட 4 பேர் ஏற்கனவே முன்வந்துள்ளனர்”, என்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் லக்ஷமன் யாப்பா அபேவர்த்தன தெரிவித்துள்ளார்.

“அந்த வீடுகளை பார்வையிட வருமாறு அவர்கள் மகிந்தவுக்கு அழைப்பு விடுத்தனர். எனினும்,

07

# நான் முதல்வரானால் அநுரவுக்கு முன்னதாக கச்சதீவு செல்வேன்!

### நாம் தமிழர் சீமான் சொல்கிறார்

சென்னை, செப். 12

நான் முதலமைச்சராக தெரிவானால் இலங்கை ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க வரமுன்னர் நான் கச்சதீவில் வந்து நிற்பேன் என்று நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

“கச்சதீவு எமது சொத்து அதனை நான் முதலமைச்சராக தெரிவானதும் நிச்சயமாக மீட்டெடுப்பேன்”, என்றும் அவர் கூறினார்.

07



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முடிந்தால் எனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுங்கள்!

## சுமந்திரனுக்கு சுகாஷ் சவால்

யாழ்ப்பாணம், செப். 12

சுமந்திரனை நோக்கிச் சில கேள்விக்கணைகளை தொடுத்துள்ள தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், அவை தவறாக இருந்தால் தனக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சுமந்திரனுக்கு சவால் விடுத்துள்ளார்.

சுகாஷ் மக்களை தவறாக வழிநடத்துவதாக சுமந்திரன் தெரிவித்த நிலையிலேயே சுகாஷ் இவ்வாறு கேள்விக் கணைகளை தொடுத்துள்ளார்.

அவர் தெரிவிக்கையில்-

1) நீங்கள் பின்கதவால் அரசியலுக்குள் பிரவேசித்த 2010 களில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற பகிரங்க விவாதத்தில் 'தமிழீழ விடுதலைப் புலிகளின் போராட்டம் தவறானது' என்று கூறி விடுதலைப் போராட்டத்தையே காட்டிக் கொடுத்தது நானா? நீங்களா?

2) தமிழினத்துக்கு எதிரான இனப்படுகொலைக்கு ஆதாரங்களில்லை என்று பச்சைப் பொய்யைக் கூறி இலங்கை அரசைக் காப்பாற்றியது நானா? நீங்களா?

3) தமிழினத்திற்கு எதிரான இனப்படுகொலையை வெறும் 'யுத்தக் குற்றங்கள்' என்று மலினப்படுத்தியது நானா? நீங்களா?

4) 2015 - 2019 மைத்திரி - ரணில் ஆட்சியில் அறிமுகப்படுத்த முற்பட்ட ஒற்றையாட்சிக்குட்பட்ட ஏக்கிய ராஜ்ஜிய யாப்பைச் சட்டம் தெரிந்த சட்டத்தரணியாக இருந்தும் வெட்கமே இல்லாமல் 'சமஷ்டி' என்று பொய்யுரைத்தது நானா? நீங்களா?

5) முன்னாள் ஜனாதிபதிகள் ரணிலோடும் ராஜபக்‌ஷக்களோடும் மாறி மாறிக் கொஞ்சிக் குலாவி தமிழினத்தையே சிங்களத்திடம் அடகு வைத்தது நானா? நீங்களா?

6) சிங்கள பௌத்த பேரினவாத ஜே.வி.பியோடு சேர்ந்து மே தின ஊர்வலத்தில் பங்கேற்றுச் சிங்களக் கட்சிகளுக்குத் தமிழர் தாயகத்தில் அங்கீகாரம் கொடுத்தது நானா? நீங்களா?

7) தமிழினத்திற்கான தீர்வைப் பெறக்கூடிய பல சந்தர்ப்பங்களை அற்பச் சலுகைகளுக்காகச் சிங்களத்திடம் அடைமானம் வைத்தது நானா? நீங்களா?

8)ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் சர்வதேச விசாரணையைக் கோராது உள்ளக விசாரணையான 'கலப்புப் பொறிமுறைக்கு' இணக்கம் தெரிவித்து ஒட்டுமொத்தத் தமிழ் மக்களுக்கும் துரோகமிழைத்தது நானா? நீங்களா?

9) தமிழ் மக்கள் இராணுவப் பிரசன்னத்தை எதிர்த்து நிற்க எஸ்.ரி.எவ். பாதுகாப்பில் உலா வந்தது நானா? நீங்களா?

10) இராணுவத்துக்கு எதிராக ஹர்த்தால் என்று நாடகமாடிவிட்டு, உலகத்திலேயே முதல் தடவையாக காலையோடு ஹர்த்தாலை நிறைவு செய்த அரசியல் வேடதாரி நானா? நீங்களா?

இப்படி உங்களின் அரசியல் துரோகங்களும் திருகுதாளங்களும் இன்னும் நிறையவே இருக்கின்றது.

மக்களைத் தவறாக வழி நடத்துபவனாக இருந்திருந்தால், நீங்களும் உங்கள் மகளும் ஒன்றாக இருந்த புகைப்படத்தைச் சிலர் தப்பாகச் சிருஷ்டிக்க முற்பட்டபோது, அரசியல் வேறுபாடுகளைக் கடந்து முதலாவது நபராக முன்வந்து பகிரங்கமாக அந்த விடயத்தைக் கண்டித்திருக்கமாட்டேன்.

இப்பொழுதும் கூறுகின்றேன், தமிழினத்தின் தற்போதைய கையறு நிலைக்கு நீங்களும் உங்கள் கட்சியுமே பிரதான காரணம்.

நான் ஏதேனும் தவறாக அல்லது பொய்யாக எழுதியதாகக் கருதினால், நீங்கள் தாராளமாக எனக்கெதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கலாம். நீதிமன்றத்தில் சந்திப்போம். தயவு செய்து இனியாவது இனத்தைக் காட்டிக் கொடுத்து அரசியல் பிழைப்பு நடத்தாது திருந்தி வாழ முயற்சி செய்யுங்கள், அல்லது வரலாறு உங்களை மன்னிக்காது - என்றார். (அ-05)

# வவுனியாவில் பௌத்த துறவிக்கு சிலை அமைக்க இடம் தாருங்கள்!

## மாநகர சபை உறுப்பினர் கோரிக்கை

வவுனியா, செப். 12

மரணித்த பௌத்ததுறவிக்கு சிலை ஒன்றினை அமைப்பதற்கு வவுனியா நகரப்பகுதியில் இடம் ஒன்றை வழங்குமாறு மாநகர சபை உறுப்பினர் லலித் ஜெயசேகர கோரிக்கை விடுத்துள்ளார்.

வவுனியா மாநகரசபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் சு.காண்டீபன் தலைமையில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது சபையின் உறுப்பினர் முகமட் முனவ்வர் வவுனியா தர்மலிங்கம் வீதியின் முகப்பில் உள்ள காணியில் இஸ்லாமிய கலாசாரத்தை பிரதிபலிக்கும் தூபி ஒன்றை அமைப்பதற்கான அனுமதியை வழங்குமாறு கோரியிருந்தார். அந்த பகுதியில் பள்ளிவாசல் இருப்பதால் அதனை அமைப்பதற்கு அந்த இடம் பொருத்தமானதாக இருக்கும் என அவர் தெரிவித்திருந்தார்.

இதன்போது எழுந்த துணை முதல்வர் கார்த்தீபன், அந்த பகுதியில் மரணித்த ஊடகவியலாளர்களுக்கான ஒரு பொது நினைவுத் தூபியினை நிறுவுவதற்கான அனுமதியை ஏற்கனவே நான் கோரியுள்ளேன். தற்போது பள்ளிவாசல் அமைந்துள்ள பகுதியானது மதரசா பாடசாலை ஒன்றுக்காவே அந்த காலப் பகுதியில் வழங்கப்பட்டது. தற்போது பள்ளிவாசல் அமைக்கப்பட்டுள்ளது. அதில் ஒரு பிரச்னையும் இல்லை. ஆனால் அதனை சுற்றியுள்ள இடங்களை நீங்கள் உரிமை கோர முடியாது எனத் தெரிவித்தார்.

இதன்போது எழுந்த மற்றொரு உறுப்பினரான லலித் ஜெயசேகர, அண்மையில் மரணித்த பௌத்த பிக்கு ஒருவருக்கு சிலை அமைப்பதற்கு வவுனியா நகரில் இடம் ஒன்றை வழங்குமாறு தாழ்மையான வேண்டுகோள் ஒன்றை விடுத்திருந்தார்.

இதற்கு பதில் அளித்த முதல்வர் காண்டீபன், சிலைகள் அமைப்பது தொடர்பாக முழுமையான தீர்மானத்திற்கூடாகவே செல்ல முடியும். சபை அங்கீகரித்து ஆளுநர் வரை அந்த விடயம் செல்லவேண்டும். எழுத்தில் மாத்திரம் கோரிக்கைகளை தருவதால் பயன் இல்லை.

எனவே சமூகங்களுக்கிடையில் பிரச்னைகளை ஏற்படுத்த வேண்டாம். ஏற்கனவே எம்.ஜி.ஆர் சிலை ஒன்றை அங்கு வைப்பதற்கான முயற்சி எடுக்கப்பட்டு அது தடுக்கப்பட்டிருந்தது. எனவே விண்ணப்பங்களை கோருவோர் முழுமையான தகவல்களை வழங்கி அதனை சபைக்கு சமர்பிக்குமாறு தெரிவித்திருந்தார். (அ)

# இராணுவ வாகனம் மோதியதில் விபத்து; மோ.சைக்கிளில் சென்றவர் படுகாயம்!

யாழ்ப்பாணம், செப். 12

ஆவரங்கால் பகுதியில் இராணுவ ட்ரக் வாகனம் மோட்டார் சைக்கிளுடன் மோதி விபத்துக்குள்ளாகியது.

இவ்விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற நபர் படுகாயமடைந்துள்ளார்.

இந்நிலையில் அவர் அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (அ)

# கண்ணிவெடி அகற்றி கையளித்த பகுதிகளை ஜப்பானிய தூதரகப் பிரதிநிதிகள் குழு பார்வை

கிளிநொச்சி, செப். 12

கிளிநொச்சிக்கு விஜயம் செய்த இலங்கைக்கான ஜப்பானிய தூதரக பிரதிநிதி குறுக்கோவா எறிக்கோ, ஹிசாகி சுமுறா மற்றும் ஜனனி கந்தையா ஆகியோர் முகமாலை பிரதேசத்தில் கண்ணிவெடியகற்றப்பட்டு கையளிக்கப்பட்ட பிரதேசங்களின் தற்போதைய முன்னேற்றங்களை பார்வையிட்டனர்.

கிளிநொச்சி மாவட்டத்திற்கு நேற்று முன்தினம் விஜயம் செய்த இலங்கைக்கான ஜப்பானிய தூதரக பிரதிநிதிகள் குழுவினர் மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் பணிகளை முன்னெடுத்து வரும் ஸார்ப் நிறுவன அலுவலகம் மற்றும் முகமாலையில் கண்ணிவெடியகற்றி கையளிக்கப்பட்ட பிரதேசங்களின் தற்போதைய முன்னேற்ற நிலை பிரதேசதளம் என்பவற்றை மேற்பார்வையிட்டதுடன் எதிர்கால திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடியுள்ளனர்.

கண்ணிவெடியகற்றலில் ஈடுபடும் ஸார்ப் நிறுவனமானது 2016 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் தொடக்கம் 2025 செப்ரெம்பர் மாதம் 10ஆம் திகதி வரையான காலப்பகுதியில் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தச்சடம்பன் அம்பகாமம் ஒழுமடு மற்றும் மாங்குளம் கொக்காவில் பகுதியிலும், புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பகுதியிலும் கிளிநொச்சி மாவட்டத்தில் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள முகமாலையிலும், கிளாலி,இயக்கச்சி மற்றும் ஆனையிறவிலும், கண்டாவளை பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள தட்டுவன்கொட்டி பகுதியிலும் 35 இலட்சத்து 53 ஆயிரத்து 40 சதுரமீற்றர் பரப்பளவில் இருந்து 80 ஆயிரத்து 174 அபாயகரமான வெடிபொருட்களை அகற்றியுள்ளதாக ஸார்ப் நிறுவனத்தின் நடவடிக்கை முகாமையாளர் ஓய்வு பெற்ற கப்டன் பிரபாத் நாரம்பனவ தெரிவித்துள்ளார்.

தற்போது நான்கு அணிகள் கண்ணிவெடியகற்றும் பணிகளை முகமாலை பகுதியில் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# எல்ல விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு வவுனியா மாநகர சபையில் அஞ்சலி!



வவுனியா, செப். 12

அண்மையில் இராவண எல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு வவுனியா மாநகர சபையின் அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

கடந்த 4ஆம்திகதி இரவு எல்லபகுதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் தங்காலை நகரசபை ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் உட்பட 15 பேர் பலியாகியிருந்தனர்.

அவர்களின் ஆத்மா சாந்தியடைவதற்காக வவுனியா மாநகர சபையின் நேற்றைய அமர்வில் அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது சபையின் விளக்குகள் அனைத்தும் அணைக்கப்பட்டு மெழுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது. (அ)

# வனவளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் மண்டைதீவில் நிலங்கள் தூய்மையாக்கல்

யாழ்ப்பாணம், செப். 12

யாழ் - கிளிநொச்சி மாவட்டங்களின் வன வளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வேலணை, மண்டைதீவுப் பகுதியில் உள்ள கண்டற் தாவரங்கள் சூழ்ந்துள்ள நிலப்பரபுகள் தூய்மையாக்கல் செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட வன வள திணைக்களத்தின் அதிகாரி வத்தேகம தலைமையில் முன்னெடுக்கப்பட்ட குறித்த தூய்மையாக்கல் நிகழ்வு நாட்டில் முன்னெடுக்கப்படும் கிளீன் சிறீலங்கா திட்டத்தின் ஓர் அங்கமாக நேற்று முன்னெடுக்கப்பட்டது.

குறித்த தூய்மையாக்கல் நிகழ்ச்சித் திட்டத்தை யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட வனவள திணைக்களத்துடன், மண்டைதீவு கடற்படை, வேலணை பிரதேச சபை, வேலணை பிரதேச செயலகம், கரையோர பேணல் மற்றும் கரையோர மூலவள முகாமைத்துவ திணைக்களம் ஆகியன இணைந்து முன்னெடுத்திருந்தன. (அ-05)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
12.09.2025 வெள்ளிக்கிழமை
விசுவாவசு வருடம், ஆவணி 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## பதின் மூன்று

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான இணையனுசரணை நாடுகளான பிரித்தானியா, கனடா, மலாவி, மொன்டினீக்ரோ மற்றும் வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் இலங்கை அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச்சட்டத்தின் அடிப்படையில் மாகாண சபைகள் முழுமையாக இயங்குவதற்கான சூழலை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். அத்துடன், மாகாண சபைகள் தேர்தலை நடத்த வேண்டும் என்று கூட்டாக வலியுறுத்தியிருக்கின்றன.

மனித உரிமைகள் பேரவையின் புதிய பிரேரணையில் இந்த விடயத்தை உள்ளடக்கும் பரிந்துரையையும் முன்வைத்திருக்கின்றன. இதுவரையில் இந்த விடயம் தொடர்பில் இந்தியா மட்டுமே அழுத்தம் திருத்தமாக வலியுறுத்தி வந்திருக்கிறது. ஆனால், இப்போது இணையனுசரணை நாடுகளும் மாகாண சபையை வலியுறுத்தியிருக்கின்றன. பதின் மூன்றை எதிர்ப்பதை ஒரு கோஷமாக வைத்திருப்பவர்கள் இனி என்ன செய்யப் போகின்றனர்?

அரசியலில் யதார்த்தமாக சிந்திக்க வேண்டும் என்று கூறுபவர்களை துரோகிகளாவும் இந்திய முகவர்களாவும் சித்தரிக்க முற்படுபவர்கள் இப்போது எந்த அடிப்படையில் இதனை எதிர்கொள்ளப் போகின்றனர்? இணையனுசரணை நாடுகளும் வலியுறுத்தும் ஒரு விடயத்தை எதிர்த்து செயல்படப் போகிறார்களா? அனைவரையும் எதிர்த்துவிட்டு எவருடன் இணைந்து பயணிப்பது?

யுத்தம் முடிவுற்று பதினாறு வருடங்கள் சென்ற பின்னரும்கூட, அரசியல் தீர்வு விடயத்தில் அரசமைப்பின் பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தை தாண்டிப் பயணிக்க முடியாதிருக்கிறது என்பதைப் புரிந்து கொள்ள முயற்சிப்பதுதான் முதன்மையானது. இந்த இடத்திலிருந்துதான் அரசியலை கையாளவும் சவால்களை கடந்து செல்வது பற்றியும் சிந்திக்க வேண்டும்.

நாங்கள் யதார்த்தமாக சிந்திக்கமாட்டோம், இப்படித்தான் அனைத்தையும் எதிர்த்துக் கொண்டிருப்போம் என்றால் - அதனால் அரசாங்கமே நன்மையடையும். ஏனெனில், அரசாங்கம் அதன் நிலைப்பாட்டைத் தெளிவாக முன்வைத்து வருகிறது. இந்தநிலையில் இந்தியாவும் இணையனுசரணை நாடுகளும் வலியுறுத்தும் மாகாண சபையை நாங்கள் ஏறெடுத்தும் பார்க்க மாட்டோம் என்று ஓர் அணியினர் கூறிக் கொண்டிருப்பார்கள் என்றால், உண்மையில் அவர்கள் ஆட்சியாளர்களுக்கே சேவகம் செய்கின்றனர். ஏனெனில், அரசமைப்பின் பதின் மூன்றை எதிர்த்து நிற்பதானது அடிப்படையில் ஆட்சியாளர்கள் செய்யக்கூடியதையும் செய்யாமல் விடுவதற்கும் அல்லது மாகாண சபைகள் தேர்தலைப் பிற்போடுவதற்குமே இறுதியில் பயன்படும்.

பதின் மூன்றை அதிர்ஷ்டமில்லாத இலக்கம் என்று கூறுவதுண்டு. ஆனால், தமிழர் அரசியலில் பதின் மூன்றை தாண்டினால் இருக்கும் கொஞ்ச அதிர்ஷ்டமும் இல்லாமல் போய்விடுமோ என்னும் நிலைமையே இருக்கிறது. ஏனெனில், புதிய அரசியல் யாப்பு ஒன்றைக் கொண்டுவந்தால் பதின்மூன்றில் இருப்பதாவது மிஞ்சுமா என்னும் கேள்வி தமிழர் தலைக்கு மேல் கத்தியாகத் தொங்கிக் கொண்டிருக்கிறது. எனவே, தொடர்ந்தும் பதின் மூன்றை எதிர்த்துக் கொண்டிருக்காமல் இனியாவது யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு செயல்பட அனைத்துத் தமிழ் கட்சிகளும் முன்வர வேண்டும். பதின் மூன்று விருப்பம் அல்ல - அது ஓர் அரசியல் தேவை. தேவையா விருப்பமா என்று வருகின்றபோது தேவையே வெல்லும்.

## பாதாள குழுவுக்கு துப்பாக்கிகள்; படையதிகாரி கைது

கொழும்பு, செப். 12

பாதாள உலகக் குழுவை சேர்ந்தவர்களுக்கு துப்பாக்கிகளை வழங்கிய லெப். கேணல் தர படை அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர், அண்மையில் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட பாதாள உலகக் குழுக்களின் முக்கியஸ்தர்கள்

கெஹல்பத்தர பத்மே, கொமாண்டோ சலிந்த ஆகியோருக்கு துப்பாக்கிகளை வழங்கியுள்ளார் என்று கூறப்படுகிறது.

குறித்த படை அதிகாரியை மேல் மாகாணத்தின் வடக்கு குற்றப் புலனாய்வு பிரிவினர் கைது செய்தனர்.

(ஐ)

## குரும்பசிட்டியில் வாள்வெட்டு இளம்குடும்பஸ்தர் படுகாயம்!

யாழ்ப்பாணம், செப். 12

குரும்சிட்டி- தெல்லிப்பழை வைத்தியசாலை வீதியில் நேற்று காலை வாள் வெட்டுச் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் கொண்ட குழு ஒன்று குடும்பஸ்தர் மீது இந்த வாள் வெட்டை மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளதாக பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவத்தில், இரண்டு பிள்ளைகளின் தந்தையான தர்மராசா தினேஷ் குமார் (வயது 32) பலத்த வெட்டுக் காயங்களுக்கு உள்ளான நிலையில் தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்



பட்டுள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் பலாலி பொலிஸார் மற்றும் அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(அ-05)

## மன்னார் நகர சபையால் வடிகால் சுத்தப்படுத்தல்

மன்னார், செப். 12

மன்னார் நகர சபை எல்லைக்குள் நீண்டகாலமாக துப் புரவு செய்யப்படாமல் உரிய பராமரிப்பின்றி பிளாஸ்ரிக் மற்றும் ஏனைய கழிவுகளால் நிறைந்து காணப்பட்ட பிரதான வாய்க்கால்களை சுத்தப்படுத்தும் பணி நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டது.

குறித்த நடவடிக்கை இம் மாதம் இறுதி வரை முன்னெடுக்கப்படவுள்ளது.

மழை காலம் ஆரம்பிக்க உள்ள நிலையில் மன்னார் நகர் பகுதிக்குள் ஏற்படும் வெள்ள பாதிப்புகளை குறைக்கும் முகமாக நகர சபை ஊழியர்கள் மற்றும் நகர சபை உறுப்பினர்கள், நகரசபை சுகாதார உத்தியோகத்தரின் பங்குபற்றுதலுடன் சுத் தப்படுத்தும் பணி இடம் பெற்று வருகின்றது.

குறிப்பாக எமில் நகர் தொடக்கம் பனங்கட்டிக் கொட்டு பகுதியூடாக கழிவு நீர் வழிந்தோடி கடலுடன் கலக்கும் பிரதான கால்வாய் முதல் கட்டமாக சுத்தப்படுத் தப்பட்டு கழிவுகள் அகற்றப்பட்டதுடன் இதனை தொடர்ந்து இம்மாதம் முழுவதும் பிரதான வாய்கால்கள் அனைத்தும் நகரசபையால் சுத்தப்படுத் தப்பட உள்ளது.

அதே நேரம் இம்முறை வடிகால் துப்புரவுக்காகவும் பராமரிப்புக்காகவும் மன்னார் நகர சபையால் 20 இலட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## ஐஸ் போதைப்பொருள் இரசாயனம் பாணந்துறை நிலங்கவுக்கே சொந்தமாம்

கொழும்பு, செப். 12

மித்தெனியவில் கண்டுபிடிக்கப்பட்ட ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் 'பாணந்துறை நிலங்க'வுக்கு சொந்தமானது என்று பாதாள உலகக் குழுவை சேர்ந்த 'கெஹெல்பத்தர பத்மே' குற்றப் புலனாய்வு திணைக்களத்துக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

அண்மையில் இந்தோனேசியாவில் கைது செய்யப்பட்ட இவர்கள், நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவர்கள் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகினறனர். இந்த நிலையில், மித்தெனியவில் கடந்த 5ஆம் திகதி 50 ஆயிரம் கிலோ இரசாயனப் பொருள் கண்டுபிடிக்கப்பட்டது. இது ஐஸ் போதைப்பொருள் உற்பத்திக்கு பயன்படுத் தப்படுவது என்று கூறப்படு கிறது. இது 'கெஹெல்பத்தர பத்மே'வுக்கு சொந்தமானது என்று கூறப்பட்டது.

இந்த நிலையில், அவர் இந்த இரசாயனப் பொருட்கள் 'பாணந்துறை நிலங்க'வுக்கு சொந்தமானது என்று வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

## கர்ப்பவதிகளுக்கு உணவு பொதி


கொழும்பு, செப். 12

போசாக்கு மட்டம் குறைவாகவுள்ள ஒரு இலட்சத்து 60 ஆயிரத்து 200 கர்ப்பவதி தாய்மாருக்கு 5 ஆயிரம் ரூபாய் பெறுமதியான உணவுப் பொதிகளை வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை முன்னெடுத்துள்ளதாக சிறுவர் மற்றும் மகளிர் விவகார அமைச்சர் சரோஜா சாவித்திரி போல் ராஜ் தெரிவித்தார்.

பெண் தலைமைத்துவ குடும்பங்களில் நிலவும் பிரச்னைகளை கருத்தில் கொண்டு இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று அவர் பாராளுமன்றில் தெரிவித்தார்.

(ஐ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் நீடிப்பதால் சந்தேகப்படுவதை முதலில் நிறுத்துங்கள். வியாபாரத்தில் இழப்பு கள் ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக அவமானம் வந்து நீங்கும். பொறுமைத் தேவைப்படும் நாள்.

**இடபம்**
அனாவசிய செலவுகளை குறைக்கப்பாருங்கள். சகோதர வகையில் அலைச்சல் உண்டு. வியாபாரத்தில் பழைய பாக்கிகளை போராடி வசூலிப்பீர்கள். வேலைச்சுமையால் சோர்வு அடைவீர்கள்.

**மிதுனம்**
எதார்த்தமாக பேசிக் கவர்வீர்கள். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத்தில் விஐபிகள் வாடிக்கை யாளர் ஆவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் பாராட்டுவார்கள்.

**கடகம்**
நீண்ட நாள் ஆசையில் ஒன்று நிறைவேறும். உறவினர் நண்பர்கள் எதிர்பார்ப்புடன் பேசுவார்கள். வியாபாரத்தில் புது இடத்திற்கு கடையை மாற்றுவீர்கள். அலுவலகத்தில் மரியாதை கூடும்.

**சிம்மம்**
கணவன்- மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். உடல் நிலை சீராகும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் வரும். உத்தியோகத்தில் சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். புத்துணர்ச்சி பெருகும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் ஒரு விஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களை உதாசீனப்படுத்த வேண்டாம். நிதானம் தேவைப்படும் நாள்.

**துலாம்**
சகோதர வகையில் நன்மை உண்டு. விலை உயர்ந்த ஆபரணம் வாங்குவீர்கள். மனைவி வழியில் மதிக்கப்படுவீர்கள். உத்தியோகத்தில் தலைமையின்ஆதரவுகிட்டும். தன்னம்பிக்கை துளிர்விடும்.

**விருச்சிகம்**
குடும்பத்தாரின் விருப்பங்களை நிறைவேற்றுவீர்கள். வியாபாரத் தில் அதிரடியான திட்டங்கள் தீட்டுவீர்கள். உத்தியோகத்தில் சவாலான வேலைகளையும் சாதாரணமாக முடிப்பீர்கள். தொட்டது துலங்கும்.

**தனுசு**
வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். பிள்ளைகளின் தனித்திறமைகளை கண்டறிவீர்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணர்வீர்கள். உங்களின் ஆலோசனை ஏற்கப்படும்.

**மகரம்**
கடந்த கால இனிய அனுபவங்களை நினைவுக் கூர்ந்து மகிழ்வீர்கள். வியா பாரத்தில் பங்குதாரர்கள் பிரச்சினை தீரும். சூழ்ச்சி களைத் தாண்டி முன்னேறுவீர்கள். நன்மைகள் உண்டாகும் நாள்.

**கும்பம்**
குடும்பத்தில் உள்ளவர் களின் உணர்வுகளை புரிந்துக் கொண்டு அதற்கேற்ப உங்களை மாற்றிக் கொள்வீர்கள். வியாபாரம் செழிக்கும். உத்தியோகத்தில் அதிகாரிகளுக்கு நெருக்கமாவீர்கள்.

**மீனம்**
குடும்பத்தில் கலகலப்பான சூழல் உருவாகும். சில வேலை களை விட்டுக் கொடுத்து முடிப்பீர் கள். வெளிவட்டாரத்தில் மதிப்பு கூடும். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு. மகிழ்ச்சி தொடங்கும் நாள்.

# யாழில் சிறுவன் உட்பட நான்கு பேர் ஹெரோயின் போதையுடன் கைது

யாழ்ப்பாணம், செப். 12

யாழ்ப்பாணத்தில் சிறுவன் உட்பட நான்கு பேர் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டனர்.

16, 18, 20 மற்றும் 22 வயதுடைய நால்வரே 170 மில்லி கிராம் ஹெரோயினுடன் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் பொலிஸ் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மாவட்ட போதைப்பொருள் தடுப்புப் பொலிஸாரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப் பட்டது.

இவ்வாறு, கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் இவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப் படவுள்ளனர். (எ-05)

## “வவுனியா மாநகர சபை மக்கள் விரோத, மண்கொள்ளை சபையாக மாறிவருகிறது”

வவுனியா, செப். 12

வவுனியா மாநகர சபை மக்கள் விரோத சபையாகவும் மண்கொள்ளை சபையாகவும் மாறி வருகிறது என குறித்த சபையின் உறுப்பினர் சி. பிறேமதாஸ் தெரிவித்தார்.

வவுனியாவில் உள்ள அவரது அலுவலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில்,

“சோலை வரி தொடர்பில் முதல்வர் தன்னிச்சையாகவும் சர்வாதிகாரமாகவும் செயல்பட்டு வருகின்றார் என்பது எனது கருத்து. வவுனியா மாநகர சபை மக்கள் விரோத சபையாகவும் மண்கொள்ளை சபையாகவும் மாறி வருகிறது. சபையில் உள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் 10 பேரின் கருத்துக்களை கேட்காது அவர்களது உறுப்புரிமைக்கு மதிப்பளிக்காது முதல்வரும் அவருடன் இணைந்தவர்களும் தன்னிச்சையாக செயல்பட்டு வருகின்றனர்.

ஏனைய மாநகர சபைகளில் இவ்வாறான அதிகரிப்பு செய்யப்படவில்லை. ஆனால், வவுனியா மாநகர சபை மட்டும் அதிகரித்துள்ளது. ஏனைய சொத்துக்களின் வருமானத்தை குறிப்பிடத்தக்க அளவில் அதிகரிக்காது ஆதன வரியை மட்டும் அதிகரித்துள்ளார்.”- என்றார். (எ-10)

## வவுனியா பொலிஸ் பொறுப்புதிகாரிக்கு திடீரென இடமாற்றம்

வவுனியா, செப். 12

வவுனியா தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ஜெயக்கொடி திடீரென குருநாகல் மாவட்டத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக மாத்தளையில் கடமையாற்றிய பீ. எஸ். டிறட்ரண நியமிக்கப்பட்டுள்ளார். அவர் விரைவில் கடமைகளைப் பொறுப்பேற்கவுள்ளார். (எ-10)

## மாணவ முதல்வர்களால் ‘முழவம்’ இதழ் வெளியீடு

கிளிநொச்சி, செப். 12

கிளிநொச்சி - முழங்காவில் தேசிய பாடசாலையில் 2025ஆம் ஆண்டு மாணவ முதல்வர்களால் முழவம் இதழ்-2 நேற்று முன்தினம் வெளியிட்டு வைக்கப் பட்டது.

பாடசாலை அதிபர் திருமதி சி. பரதன் மற்றும் சிறப்பு விருந்தினராக கலந்து சிறப்பித்த வவுனியா தேசிய கல்லூரியின் விரிவுரையாளரும் முழங்காவில் மகா வித்தியாலயத்தின் முன்னாள் பிரதி அதிபருமாகிய பா. மதனரூபன் ஆகியோரால் முழவம் இதழ்-2 வெளியிட்டு வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து சிறப்புப் பிரதிகள் அயல் பாடசாலை அதிபர்களுக்கு வழங்கப் பட்டன. நிகழ்வில் பாடசாலையின் பிரதி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

முழவம் இதழ் 1கடந்த 2024 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.

(எ)

## மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 104ஆவது நினைவு தினம் வவுனியாவில்



வவுனியா, செப். 12

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 104ஆவது நினைவு தினம் நேற்றுக்காலை வவுனியா குருமன்காட்டு சந்தியில் அமைந்துள்ள அவரது சிலையடியில் நடைபெற்றது.

இதன்போது, அவரது சிலைக்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டதுடன், திருமதி கிருஷ்ணராஜ் லிசாந்தினியால் கவி அஞ்சலியும் ஆசிரியர் கதிர்வண்ணனால் நினைவுரையும் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

வவுனியா மாநகர சபை முதல்வர் சு. காண்டீபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மாநகர சபை பிரதி முதல்வர், மாநகர சபை உறுப்பினர் கள், முன்னாள் உள்ளூராட்சி சபை உறுப்பினர்கள், தன்னார் வலர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-10)

## சமூக ஊடக நிறுவனங்கள் மூலம் அரசுகள் கவிழ்க்கப்பட வாய்ப்பு

### நேபாள வன்செயல்கள் குறித்து ரணில்

கொழும்பு, செப். 12

கூகுள், பேஸ்புக் மற்றும் யூடியூப் போன்ற அமெரிக்காவுக்கு சொந்தமான சமூக ஊடக நிறுவனங்கள் உலகெங்கிலும் உள்ள நாடுகளில் அரசாங்கங்களை கவிழ்ப்பதற்கு அளித்துள்ள வாய்ப்பை குறைத்து மதிப்பிட முடியாது - என்று நேபாள நிலைமை தொடர்பில் வெளியிட்ட விசேட அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மேலும், நேபாளத்தில் நீண்டகாலமாக காணப்பட்ட பிரச்னைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை. தெற்காசிய பாரம்பரியத்தின்படி, கடுமையான பிரச்னைகளுக்கு தீர்வு காணாமல் அனைவரும் அன்றாட அரசியலில் கவனம் செலுத்தியமையே இளைஞர்களிடையே பெரும் விரக்தியை ஏற்படுத்தியிருக்கிறது. பிரச்னைகளை தீர்க்க அரசாங்கத்துக்கு திறமையின்மையே நேபாளத்தின் அழிவுக்கு காரணமாகியுள்ளது.

நேபாளம் - காத்மண்டுவில் நிலவும் பதற்றமான சூழ்நிலை குறித்து பல ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ளன. முதலில் நேபாளத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ள இளைஞர்கள் மீதான தாக்குதல் உள்ளிட்ட அனைத்து வகையான கொலைகளையும் நான் கண்டிக்கிறேன்.

இதேபோல், முன்னாள் பிரதமரின் வீடு எரிக்கப்பட்டதும், முன்னாள் பிரதமரின் மனைவி கொல்லப்பட்டதும் மிகவும் சோகமான சூழ்நிலையாகும். அந்த படுகொலைக்கு எனது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், அமைச்சர்கள், குறிப்பாக வெளிவிவகார அமைச்சர் மீதான தாக்குதல்கள், நேர்ந்த துயரத்தின் மேலும் ஒரு நீட்சியாகும். பெண்களின் உரிமைகள் கடுமையாக மீறப்பட்டுள்ளன. இத்தகைய செயல்கள் நேபாளத்தின் நற்பெயருக்கு களங்கத்தை ஏற்படுத்தியுள்ளன. எவ்வாறாயினும் இறுதியில் அரசமைப்பு இல்லாத ஒரு நேபாளமே எஞ்சியுள்ளது. அதிகாரத்தைக் கைப்பற்றிய இராணுவத்தின் பொறுப்பு, நாட்டில் அமைதியை நிலைநாட்டுவதும், அரசமைப்பின் படி தேர்தலை நடத்துவதும் ஆகும் - என்றுள்ளது.

(ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியலில் இருந்து ஓய்வு பெறவில்லை!

## சொல்கிறார் சமல் ராஜபக்ஷ

கொழும்பு, செப். 12

**"நான் அரசியலில் இருந்து ஓய்வுபெறவில்லை. தற்போதுநடப்பவற்றைஉன்னிப்பாகஅவதானித்துவருகின்றேன்." -என்று முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.**

"அரசியலுக்குள் வந்துவிட்டால் அதனை கைவிடமுடியாது. நான் இன்னும் ஓய்வுபெறவில்லை. தற்போது நடப்பவற்றை அவதானித்துவருகின்றேன். எமக்கு மக்கள் ஆதரவு உள்ளதா என்பதை தேர்தலில் போட்டியிட்டே கண்டறியமுடியும்."- எனவும் அவர் கூறினார்.

கடந்த பொதுத்தேர்தலில் சமல் ராஜபக்ஷ போட்டியிடவில்லை. அவரது மகன் சஷீந்திர ராஜபக்ஷவும் மண் கவ்வினார்.

பல மாதங்களுக்கு பிறகு பொதுவெளிக்கு வந்த சமல் ராஜபக்ஷவின் அரசியல் நடவடிக்கை தொடர்பில் எழுப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார். (அ)



# நாமலுக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யப்படும்!

## பிரதி அமைச்சர் சுனில் வட்டகல



கொழும்பு, செப். 12

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ தனக்கு எதிராக ஒரு பில்லியன் ரூபா இழப்பீடு கோரி மானநஷ்ட வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் அதற்கு பதில் வழங்கத் தாம் தயாராக உள்ளதாக பொது மக்கள் பாதுகாப்புத் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல தெரவித்துள்ளார்.

இது குறித்து பொது மக்கள் பாதுகாப்புத் பிரதி அமைச்சர் சுனில் வட்டகல கருத்துத் தெரிவிக்கையில்-

நாமல் ராஜபக்ஷ எனக்கு எதிராக 14 நாட்களுக்குள் மான நஷ்ட வழக்கு தாக்கல் செய்ய வேண்டும். இல்லையேல் சட்டத்தின் பிரகாரம் அவருக்கு எதிராக நான் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து நட்ட ஈடு கோருவேன்.

மானநஷ்ட வழக்கு என்பது ஒழுக்கத்தை அடிப்படையாகக் கொண்டது. வழக்கு தாக்கல் செய்தால் நாமல் ராஜபக்ஷ விடம் சட்டக்கல்லூரி, தாஜூதீன், லசந்த,எக்னெலிகொட, ஜூலம்பிட்டிய அமரே உள்ளிட்ட பல விடயங்களை குறுக்கு கேள்வியாக கேட்பேன்.

ஆனாலும் எனக்கு உத்தியோகபூர்வமாக எவ்வித பத்திரமும் இதுவரைகிடைக்கப்பெறவில்லை.

நாமல் நீதிமன்றத்தில் பயிற்சிப் பெறாத காரணத்தால் மான நஷ்ட வழக்கின் தன்மையை அவர் அறிந்திருக்கவில்லை. மான நஷ்ட வழக்கின்போது முறைப்பாட்டாளரிடம் பிரதிவாதி எந்த கேள்விகளையும், கேட்கலாம். ஏனைய வழக்குகள் இவ்வாறான தன்மை கிடையாது.

குறிப்பாக முறைப்பாட்டாளர்கள் கண்ணாடி அறையில் இருக்கக்கூடாது.

கண்ணாடி அறையில் இருக்கும் நபர் என்னிடம் பில்லியன் கணக்கான நிதி கோடி கேள்வி கோரல் பத்திரத்தை அனுப்பி வைத்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

இந்த வழக்கில் ஒழுக்கம் பிரதான ஒரு அம்சமாக கருதப்படும். அவமதிப்பு வழக்கு தாக்கல் செய்பவரின் ஒழுக்கம் கேள்விக்குள்ளாக்கப்படும்-என்றார்.

# தரிசு நிலங்களை பயிர்ச்செய்கைக்கு வழங்க பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு பணிப்புரை

கொழும்பு, செப். 12

பெருந்தோட்டப் பகுதிகளில் உள்ள தரிசு நிலங்களைப் பயிர் செய்கைக்காக வழங்குமாறு பெருந்தோட்ட நிறுவனங்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற வாய்மொழி மூலமான கேள்வி நேரத்தின்போது, பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன இதனைத் தெரிவித்தார்.

முன்னதாக, பெருந்தோட்ட பகுதிகளிலுள்ள காணிகளை தனியார் நிறுவனங்களுக்கு வழங்கும்போது, ஐக்கிய தேசிய கட்சி அரசாங்கம் செய்துகொண்ட ஒப்பந்தம் மிகவும் பாரதூரமானது எனவும் அது அரசுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் கைச்சாத்திடப்பட்டுள் ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த நிலையில், பெருந்தோட்ட நிறுவனங்களுடன், பெருந்தோட்ட தொழிலாளர்களின் வேதன அதிகரிப்பு மற்றும் தரிசு நிலங்களைப் பயிர் செய்கைக்காகப் பயன்படுத்துவது குறித்துக் கலந்துரையாடியதாகவும் அமைச்சர் சமந்த வித்யாரத்ன தெரிவித்தார்.

அத்துடன் பெருந்தோட்ட பகுதிகளில் தரிசு நிலங்கள் இருப்பதற்கு இனியும் இடமளிக்கமுடியாது எனவும் பெருந்தோட்ட நிறுவனங்களின் கீழுள்ள தரிசு நிலங்களில் பயிர்ச்செய்கை செய்யப்படவேண்டும் என வலியுறுத்தியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பெருந்தோட்ட நிறுவனங்கள் இதனை ஏற்றுக்கொள்ள மறுத்தால், அரசாங்கம் உரிய நடவடிக்கை எடுத்து, அந்த இடங்களில் பயிர்ச்செய்கையை முன்னெடுக்கும் எனவும் பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன உறுதியளித்துள்ளார்.

# இலங்கை-நேபாளம் இடையிலான விமான சேவை மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு, செப். 12

நேபாளத்தில் இடம்பெற்ற பதற்றமான சூழ்நிலை காரணமாக அந்நாட்டு சிவில் விமானப் போக்குவரத்து ஆணையகத்தால் மூடப்பட்டிருந்த காத்மண்டு சர்வதேச விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டதன் மூலம் இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான விமானங்கள் மீண்டும் இயக்கப்பட்டுள்ளன.

அதன்படி, இலங்கை எயார் லைன்ஸ் விமானம் யு.எல். 181 நேற்றுக் காலை 08.15 மணிக்கு நேபாளத்தின் காத்மண்டுவுக்கு புறப்பட்டது.

இந்த விமானம் நேற்று பிற்பகல் 11.41 மணிக்கு நேபாளத்தின் காத்மண்டு சர்வதேச விமான நிலையத்தில் தரையிறங்கியது.

நேபாளத்தில் உள்ள காத்மண்டு சர்வதேச விமான நிலையத்துக்கு மட்டுமே சிறீலங்கன் எயார்லைன்ஸ் விமானங்களை இயக்குகிறது.

நேபாளத்தில் நடந்து வரும் மோதல் காரணமாக நாட்டின் சர்வதேச விமான நிலையம் மூடப்பட்டதைத் தொடர்ந்து, இலங்கைக்கும் நேபாளத்துக்கும் இடையிலான விமானங்களை நிறுத்த நேற்று முன் தினம் சிறீலங்கன் எயார்லைன்ஸ் நடவடிக்கை எடுத்திருந்தது. (அ)

# தற்போது நேபாளத்தில் உள்ள இலங்கையர் பாதுகாப்புடன்!

கொழும்பு, செப். 12

தற்போது நேபாளத்தில் உள்ள மொத்தம் 109 இலங்கையர்கள் பாதுகாப்பாக இருப்பதாக வெளிவிவகார அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

புதுப்பிப்புகளைப் பெறவும், தேவைப்படும் இடங்களில் இலங்கையர்களுக்கு உதவவும், காத்மாண்டுவில் உள்ள இலங்கைத் தூதரகம் மற்றும் பல சமூக உறுப்பினர்களுடன் தொடர்ந்து தொடர்பில் இருப்பதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதற்கிடையில், இந்தியாவில் இருந்து சாலை வழியாக லும்பினிக்கு பயணித்த 73 இலங்கை யாத்திரீகர்கள், இந்தியாவுக்குள் நுழையும்போது பாதுகாப்பாக எல்லையைக் கடந்துவிட்டதாகவும் அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

தேவையான நடைமுறைகளை விரைவுபடுத்துவதற்காக தூதரக அதிகாரிகள் நேபாள குடிவரவு அதிகாரிகளுடன் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தினர்.

நேபாளத்தின் பாதுகாப்பு நிலைமையை நேபாள இராணுவம் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாகவும், பொதுமக்கள் வீட்டிலேயே இருக்குமாறு அறிவுறுத்தல்களை பிறப்பித்துள்ளதாகவும் தூதரகம் மேலும் தெரிவித்துள்ளது.

நேபாளத்தில் நடந்து வரும் வன்முறைப் போராட்டங்களுக்கு மத்தியில், சாத்தியமான தாக்குதல்களில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டு, வீட்டிலேயே இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கை தூதரக அதிகாரிகளை +977 9851048653 என்ற தொலைபேசி எண்ணில் 24 மணி நேரமும் தொடர்பு கொள்ளலாம்.

நேபாளத்தின் நிலைமையை தொடர்ந்து கண்காணித்து வருவதாக வெளிவிவகார அமைச்சின் செய்தித் தொடர்பாளர் துஷாரா ரொட்ரிக்கோ தெரிவித்தார். (அ)

# துப்பாக்கிச் சூட்டு முயற்சியை முறியடித்த பொலிஸார்

கொழும்பு, செப். 12

கொழும்பு கொள்ளுப்பிட்டி மற்றும் மாளிகாவத்தை பகுதிகளில் திட்டமிடப்பட்ட துப்பாக்கிச் சூட்டு முயற்சியை முறியடித்து, 05 சந்தேக நபர்களை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கொள்ளுப்பிட்டி அல்பர்ட் வீதியில், நேற்று முன் தினம் புதன்கிழமை இரவு மோட்டார் சைக்கிளில் சென்ற இருவரை கொள்ளுப்பிட்டி பொலிஸார் சந்தேகத்தின் பேரில் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது சந்தேக நபரொருவர், தான் வைத்திருந்த பையை தூக்கி எறிந்துவிட்டு அப்பகுதியை விட்டு தப்பிச் சென்றுள்ளார் மற்றைய நபர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

வீசப்பட்ட பையிலிருந்து ரி-56 துப்பாக்கி ஒன்று, 30 தோட்டாக்கள், கத்தி ஒன்று மற்றும் மூன்று கையடக்கத் தொலைபேசிகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வழங்கிய தகவலைத் தொடர்ந்து, பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் தப்பிச் சென்ற சந்தேக நபர் உட்பட மேலும் மூவர் மாளிகாவத்தையில் உள்ள போதிராஜா மாவத்தைப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டனர்.

அதேநேரம், குறித்த சந்தேக நபர்களை கைது செய்யும்போது, 18 கிராம் ஐஸ் போதைப் பொருள், ஒரு மோட்டார் சைக்கிள் மற்றும் 02 கையடக்கத் தொலைபேசிகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கொழும்பு 14, வெல்லம்பிட்டி, மாளிகாவத்தை மற்றும் தெமட்டகொடை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 19, 25, 40 மற்றும் 48 வயதுடையவர்கள் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

வெளிநாட்டில் வசிக்கும் பாதாள உலக கும்பலைச் சேர்ந்த ஒருவரின் உத்தரவின் பேரில், துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு சென்றதாக விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கொள்ளுப்பிட்டி பொலிஸார்,சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (அ)

# உயர்நீதிமன்றக் கட்டணங்களை வங்கிஅட்டை மூலம் செலுத்தலாம்

கொழும்பு, செப். 12

உயர்நீதிமன்ற வழக்கு நடவடிக்கைகளுக்கான கட்டணங்களை இனி வங்கி கணக்கு அட்டைகள் மூலம் செலுத்திக்கொள்ளும் புதிய வசதி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த புதிய மின்வசதி, நேற்று முன் தினம் புதன்கிழமை காலை கொழும்பு உயர்நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற சிறப்பு நிகழ்வில் பிரதம நீதியரசர் பி.பி. சூரசேன தலைமையில் அதிகாரபூர்வமாக தொடக்கி வைக்கப்பட்டது.

இதன் மூலம் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கான கட்டணங்களை பொதுமக்கள் எளிதாகவும், பாதுகாப்பாகவும் செலுத்துவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. குறிப்பாக, முன்பு இருந்த நீண்ட நேர பணப் பரிவர்த்தனை செயல்முறைகளை தவிர்த்து, நவீன வசதியின் மூலம் விரைவான சேவையை பெறுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

நீதித்துறையில் தகவல் தொழில்நுட்ப முன்னேற்றங்களை கொண்டு வருவதற்கான நடவடிக்கைகளின் ஒரு பகுதியாக இந்த வசதி அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதப் புதைகுழி விடயத்தில் அரசாங்கம் உரிய ஒத்துழைப்பு

## நீதி அமைச்சர் ஹர்சன உறுதி

கொழும்பு, செப். 12

**குருக்கள்மடம் மனிதப் புதைகுழி விடயத்தில் அரசாங்கம் தேவையான முழு ஒத்துழைப்புக்களையும் வழங்கும் என்று நீதி அமைச்சர் ஹர்சன நாணயக்கார தெரிவித்துள்ளார்.**

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ், நீதி அமைச்சரிடம் விசேட அறிக்கை சமர்ப்பித்து குருக்கள்மடம் தொடர்பில் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எம். ஹிஸ்புல்லாஹ் உரையாற்றினார். அவரது உரைக்கு பதிலளிக்கும் போதே நீதி அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதேவேளை, ஹிஸ்புல்லா எம். பி. உரையாற்றுகையில்,

"1990 ஆம் ஆண்டு ஜூலை 12 ஆம் திகதி மட்டக்களப்பு - குருக்கள்மடம் பிரதேசத்தில் முஸ்லிம்கள் தமது புனித ஹஜ் கடமையை நிறைவேற்றி விட்டு வீடு திரும்பும் போது சிறுவர்கள், முதியோர்கள், இளைஞர்கள் என பலர் கடத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர் என குறிப்பிட்டதுடன் பல கோரிக்கைகளை முன்வைத்தார்.

இப் படுகொலைக்கு உடனடி சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். அத்தோடு, சடலங்களை தோண்டி எடுக்க தேவையான முழு உதவியும் வழங்கப்பட வேண்டும். நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்"- என்றார்.

இந்தக் கோரிக்கைகளுக்கு பதிலளித்த நீதி அமைச்சர் கூறுகையில், ஹிஸ்புல்லாவின் கோரிக்கைகளை அரசு ஏற்றுக் கொள்வதோடு, தேவையான நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள ஆயத்தமாக உள்ளதாக தெரிவித்தார்.

காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நிதி உதவிகள், வசதி ஏற்பாடுகள், சட்ட உதவிகள், தொழில்நுட்ப நிபுணர்கள் உள்ளிட்ட அனைத்து வளங்களும் வழங்கப்பட்டு, இதனை முழுமையாக செய்து முடிப்போம்- என்று அமைச்சர் உறுதியளித்தார். (எ)



# மத்தியஸ்த சபை அங்கத்தவர்களை தெரிவு செய்ய நேர்முகப்பரீட்சை

கல்முனை, செப். 12

அம்பாறை மாவட்டம் கல்முனை, சாய்ந்தமருது, சம்மாந்துறை பிரதேச செயலகத்துக் குட்பட்ட மத்தியஸ்த சபைக்கான புதிய அங்கத்தவர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப்பரீட்சை பிரதேச செயலக கட்டடத்தில் நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றது. (எ-01)

# கடுகதி ரயில் தடம் புரண்டது மலையக ரயில் சேவை பாதிப்பு

பதுளை, செப். 13

பதுளை ரயில் நிலையத்திலிருந்து கொழும்பு கோட்டை நோக்கிப் புறப்பட்ட பொடிமெனிகே கடுகதி ரயில் தடம் புரண்டது.

நேற்றுக் காலை 08. 50 மணியளவில் பதுளை ரயில் நிலையத்திலிருந்து இந்த ரயில் புறப்பட்டது.

இந்த நிலையில், குறித்த ரயில் ஹாலிஎல ரயில் நிலையத்துக்கும் பதுளை ரயில் நிலையத்துக்கும் இடையில் காலை 09. 10 மணியளவில் தடம்புரண்டது. (எ)

# வயல்களுக்கு தீவைப்பு! மக்கள், பயணிகள் அவதி

தம்பலகாமம், செப். 12

திருகோணமலை, தம்பலகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிண்ணியா பிரதான வீதியின் முள்ளியடி வயல் நிலப் பகுதியில் நேற்று முன்தினம் மாலை தீ மூட்டப்பட்டுள்ளது. இதனால், குறித்த பகுதி புகையால் மூடப்பட்டு பிரதான வீதியினூடான போக்குவரத்தும் தடைப்பட்டது.

நெல் அறுவடை முடிவடைந்த நிலையில் வயல் பகுதிகளில் விவசாயிகளால் தீ வைப்பு காரணமாக குறித்த பகுதி குடியிருப்பாளர்கள், வீதியால் செல்லும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கினர்.

இவ்வாறான நிலை குறித்தும் இதன் தாக்கம் பற்றியும் உரிய அதிகாரிகள் விவசாயிகளுக்கு விழிப்புணர்வை வழங்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதான வீதியை அண்மித்த குறித்த வயல் நிலப் பகுதியில் தீ வைப்பு நடவடிக்கையால் அதிக புகை வெளியேற்றப்பட்டு சுவாச நோய் உள்ளிட்ட பல இடர்களை மக்கள் எதிர்நோக்கலாம்.

வயலில் தீ மூட்டியதன் பிற்பாடு வயலுக்கு சொந்தமானவர்கள் வீட்டுக்கு சென்று விடுகின்றனர். பின்னர் அதிக காற்றழுத்தம் காரணமாக வேகமாக எரியப்பட்டு அங்கும் இங்கும் அதிகமான புகை வெளியேற்றப்படுகிறது.

எனவே, இவ் விடயம் தொடர்பில் விவசாயிகளும் அவதானமாக செயல்பட வேண்டுமென சமூக ஆர்வலர்கள் தெரிவித்துள்ளனர். (எ-12)

# மலையக அதிகார சபை மூடப்படாது: மனோ எம். பியிடம் அமைச்சர் உறுதி

கொழும்பு, செப். 12

மலையக அதிகார சபை என அறியப்படும் பெருந்தோட்ட பிராந்திய புதிய கிராமங்கள் அபிவிருத்தி அதிகார சபையை மூடி விட மாட்டோம். அதைத் தொடர்ந்து முன்னெடுப்போம் என பெருந்தோட்ட மற்றும் சமூக உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்யாரத்ன, தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசனிடம் நேரடியாக உறுதியளித்துள்ளார்.

இது பற்றி மனோ கணேசன் எம்.பி. கூறியதாவது;

கல்வி, காணி, வீடு, சுகாதாரம், சமூக மேம்பாடு, வருமான - வேதன தேவைப்பாடு, வறுமை ஒழிப்பு ஆகிய பல்வேறு துறைகளில் பின் தங்கியுள்ள மலையக பெருந்தோட்ட மக்கள் வளர்ச்சி அடைய வேண்டுமானால், இந்த பல்வேறு துறை சார் அமைச்சுகளின் பணிகள் கூட்டி இணைக்கப்பட வேண்டும். இந்த நோக்கத்தில் மலையக மக்களின் விசேட குறைதீர் கொள்கை தேவையை அடிப்படையாக கொண்டு, எமது நல்லாட்சியின் போது கொண்டு வரப்பட்ட, 2018ஆம் வருட 32ஆம் இலக்க சட்டத்தின் மூலம் உருவாக்கப்பட்ட நிறுவனமே, மலையக அதிகார சபையாகும்.

ஒரே பணியை செய்யும் ஒன்றுக்கு மேற்பட்ட அரச நிறுவனங்களை மூடி விட, அநுர அரசு, பிரதமர் தலைமையில் அமைத்த குழு முடிவு செய்து, அது அமைச்சரவையின் ஒப்புதலையும் பெற்றுள்ளது. இப்படி அடையாளம் காணப்பட்ட 33 அரச நிறுவனங்கள் மத்தியில், மலையக அதிகார சபையும் ஒன்றாக கணிக்கப் பட்டுள்ளது.

இந்த சபையையும் மூடி விட்டு, அதன் பணிகளை அமைச்சின் பிரிவு ஒன்றுக்கு வழங்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது ஒரு தவறான புரிதலாகும்.

இந்த நிலையில் நாம் எமது எதிர்ப்பை பல மட்டங்களில் வெளியிட்டிருந்தோம். ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்கவுக்கு இது தொடர்பில் நான் எனது ஆட்சேபனை கடிதத்தை அனுப்பியிருந்தேன். இந்த பின்னணியில் துறை சார் அமைச்சர், மலையக அதிகார சபையை மூடி விட மாட்டோம் என்று எனக்கு தனிப்பட்ட முறையில் உறுதியளித்துள்ளார்.

இது எமக்கு கிடைத்துள்ள ஆர்ப்பாட்டம் இல்லாத அமைதி வெற்றியாகும். அதிகாரபூர்வமான அமைச்சரவை முடிவு வரும்வரை நாம் அமைதியாக இந்த விடயத்தை அவதானிப்போம்- என்று குறிப்பிட்டுள்ளார். (எ)

# குருக்கள்மடத்தில் மனிதப் புதைகுழி: நீதிபதி உள்ளிட்ட அதிகாரிகள் ஆய்வு

மட்டக்களப்பு, செப். 12

1990 ஆம் ஆண்டு புனித ஹஜ் யாத்திரை முடித்த பின்னர் கல்முனை வழியாக காத்தான்குடிக்கு பயணம் செய்த முஸ்லிம்கள், ஆயுததாரிகளால் இடைமறிக்கப்பட்டு குருக்கள்மடத்தில் கொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய வழக்கு விசாரணை நேற்று வியாழக்கிழமை களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றத்தில் விசாரணைக்காக எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாக அடையாளப் படுத்தப்பட்டுள்ள இடத்தை நீதிபதி ஏ. ரஞ்சித்குமார் முன்னிலையில் தொல்பொருள் திணைக்களத்தினர், சட்டத்தரணிகள், மண்முனை தென் எருவில் பற்று பிரதேச செயலாளர், பிரதேச சபைத் தவிசாளர், பொலிஸார், காணாமல் ஆக்கப்பட்டோர் பற்றிய அலுவலக அதிகாரிகள், சட்ட வைத்திய நிபுணர்கள், தடயவியல் பொலிஸார், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர், உள்ளிட்ட பலரும் பார்வையிட்டனர்.

இதன்போது பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினரும் வருகை தந்திருந்தனர்.

குறித்த இடத்தில் புதைக்கப்பட்ட மனித எச்சங்களை தோண்டி எடுக்குமாறு ஏற்கனவே களுவாசிக்குடி நீதிவான் நீதிமன்றம உத்தரவு பிறப்பித்திருந்த நிலையில் நீதிபதி தலைமையிலான உயர் அதிகாரிகள் உரிய இடத்தைப் பார்வையிட்டனர்.

குருக்கள்மடம் கடற்கரைப் பகுதியை அண்மித்ததாக உள்ள இடம் ஏற்கனவே அடையாளம் காணப்பட்டு பொலிஸாருக்கு பாதுகாப்பு வலயம் அமைக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருந்தது. (எ)

# புத்திரகாளி அம்பாளின் தீமிதிப்பு சடங்கு ஆரம்பம்

சம்மாந்துறை, செப். 12

வரலாற்று பிரசித்தி பெற்ற அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை தமிழ்க் குறிச்சி சிறீ பத்திரகாளி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தீமிதிப்பு சடங்கு நாளை 13ஆம் திகதி சனிக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகின்றது.

தொடர்ச்சியாக 10 தினங்கள் சடங்கு நடைபெற்று, எதிர்வரும் 22 ஆம் திகதி திங்கட்கிழமை தீமிதிப்பு வைபவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

15ஆம் திகதி திங்கட்கிழமை காலை 08.00 மணிக்கு சிறீ கோரக்கர் பிள்ளையார் ஆலயத்திலிருந்து பாற்குடபவனி நடைபெறவுள்ளது.

20 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை முத்துச்சரம் புறத்தில் அம்பாள் எழுந்தருளி வீதியுலா வருகிறார்.

22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு மஞ்சள் குளிக்கும் நிகழ்வு நடைபெற்று தீமிதிப்பு வைபவம் நடைபெறவுள்ளது. (எ-08)

# இடைநிறுத்தப்பட்ட பஸ் சேவையை மீள ஆரம்பிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு, செப். 12

இடைநிறுத்தப்பட்ட பேருந்து சேவையை மீள ஆரம்பிக்குமாறு கோரி மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேசத்தின் நவகிரிநகர் பகுதியைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களும் பொதுமக்களும் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மட்டக்களப்பிலிருந்து தினமும் போரதீவுப் பற்றுப் பிரதேசத்தின் நவகிரிநகர் வரையில் போக்குவரத்தில் ஈடுபட்டு வந்த இலங்கை போக்குவரத்து சபையின் மட்டக்களப்பு சாலைக்குச் சொந்தமான பேருந்து அப்பகுதிக்குரிய சேவையை ஒருவார காலத்துக்கு மேலாக திடீரென நிறுத்தியதாக தெரிவித்து, அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பலரும் இணைந்து பதாகைளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெல்லாவெளியில் அமைந்துள்ள போரதீவுபற்று பிரதேச சபைக்கு முன்னால் உழவியந்திரங்களில் வந்திறங்கி ஒன்றுகூடிய பொதுமக்கள், கோசங்களை எழுப்பியவாறும் பதாகைகளை ஏந்திய வாறும் வெல்லாவெளியில் அமைந்துள்ள பிரதேச செயலகம் வரை சென்றனர். பிரதேச செயலகத்துக்கு முன்னால் வைத்து இலங்கை போக்குவரத்து சாலையின் போக்குவரத்து சேவையை மீறப் பெற்றுத்தருமாறு வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெஹெல்பத்தரவுடன் தொடர்புள்ள உதவி பொலிஸ் பரிசோதகர் கைது!

கொழும்பு, செப். 12

பாதாள உலகக்குழுத் தலைவர் கெஹெல்பத்தர பத்மேவுடன் தொடர்பினை பேணிய குற்றச்சாட்டில் கம்பஹா வலய, குற்றப்புலனாய்வுப் பிரிவின் உதவி பொலிஸ் பரிசோதகர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் தகவலின் படி, அண்மையில் இந்தோனேசியாவிலிருந்து நாடு கடத்தப்பட்ட கெஹெல்பத்தர பத்மே உட்பட மேலும் நான்கு திட்டமிடப்பட்ட குற்றக்குழு உறுப்பினர்களுடன், குறித்த பொலிஸ் அதிகாரி தொடர்பைப் பேணிவந்துள்ளதாக சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த பொலிஸ் அதிகாரி தொடர்பாக குற்றப்புலனாய்வு திணைக்களம் மேலும் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன் அவர்கள் இந்தோனேசியாவில் கைது செய்யப்படுவதற்கு முன்னதாக நாட்டில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி நிலையம் ஒன்றை அமைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, இந்த போதைப் பொருள் உற்பத்திக்கு தேவையான இரசாயனங்களை உள்ளடக்கிய 2 கொள்கலன்கள் கடந்த ஜனவரி மாதம் 29 ஆம் திகதி மீதெனிய பகுதிக்கு கொண்டு வரப்பட்டுள்ளதுடன் அவை அங்கு தரையிறக்கப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது

இந்த இரசாயனங்கள் கொண்டுவரப்பட்டமைக்கு ஒத்துழைப்பு வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ள மனம்பேரி சம்பத் தற்போது தலைமறைவாகியுள்ளதுடன் மீதெனிய பகுதியில் இரசாயனங்களை தரையிறக்கும்போது அவர் அங்கிருந்தமைக்கான சி.சி.ரி.வி. ஆதராங்கள் வெளியாகியுள்ளன.

அத்துடன் குறித்த இரசாயனங்களின் ஒரு பகுதி நுவரெலியாவில் ஐஸ் போதைப்பொருள் உற்பத்தி செய்யப்படுவதாகக் கூறப்படும் இடத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது.

அது தொடர்பான காணொளிகளை அவர் கெஹேல்பத்தரே பத்மே உள்ளிட்ட குழுவினருக்கு அனுப்பியுள்ளமை தொலைபேசி தரவுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

எனினும் குறித்த இரசாயனங்கள் நுவரெலியாவுக்கு கொண்டு செல்லப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் வீதி போக்குவரத்தில் ஏற்பட்ட தாமதம் காரணமாக அவை அம்பாந்தோட்டை - கொடகம ஊடாக அவை கந்தானைப் பகுதிக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. (அ)

## நீதியாக...

இந்தக் கொலை சம்பவங்களுக்கு எல்லாம் நீதியான விசாரணைகளை நடத்த வேண்டும். அதனை இலங்கை அரசாங்கத்தால் செய்ய முடியாது.

நீதியின்படி நடந்தவர்களெனில் ஏன் அரசாங்கம் வெளியக விசாரணைக்குத் தயாராகக் கூடாது?, ஏன் வெளியக விசாரணையைத் தடுக்க வேண்டும்? வெளியக விசாரணையை ஏற்றுக்கொள்ளும் வரையிலும் நீதி - நல்லிணக்கம் - சமாதானம் என்பன எப்போதும் ஏற்படாது - என்றார். (ஐ)

## போதைப்...

சுன்னாகம் பொலிஸார் இந்தக் கைதை முன்னெடுத்திருந்தனர்.

இதேவேளை, யாழ்ப்பாணம் நகரை அண்மித்த மடத்தடி பகுதியில் 10 கிராம் 670 மில்லி கிராம் கஞ்சா கலந்த மாவாவுடன் 18 வயது இளைஞர் கைது செய்யப்பட்டார் என்று யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதான இருவரையும் அந்ததந்த பகுதிகளின் நியாயதிக்க எல்லைக்குரிய நீதிமன்றங்களில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## மகிந்தவுக்கு...

அவர் அவற்றை பார்வையிடவில்லை. இவ்வாறு அவருக்கு வீடு வழங்க முன்வந்தோரில் தமிழர் ஒருவரும் அடங்குவார்.

"தங்காலைக்கு சென்றுள்ள மகிந்த ராஜபக்ஷ கொழும்புக்குத் திரும்புவது குறித்து எதனையும் தெரிவிக்கவில்லை. அவர் தங்காலையில் அமைந்துள்ள தனது இல்லத்தில் சிறிது காலம் தங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார். தேவைப்படும்போது கொழும்புக்குத் திரும்புவார்" - என்றும் அவர் கூறினார். (ஐ)

## உள்ளக...

மனித உரிமைகள் ஆணையாளர் உள் ளக பொறிமுறைக்கான இடைவெளியை வழங்குவதானது, அத்தகைய உள்ளகப் பொறிமுறைகளின் நீண்ட காலத் தோல்வியின் பின்னணியில் அச்சுறுத்தலானதொரு நிலையையே தோற்றுவிக்கும்.

- சுயாதீன சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறை ஒன்றைத் தமிழ் மக்கள் எதிர்பார்த்திருக்கும் சூழ்நிலையில் இவ்வாறான நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் சபைமீதான நம்பிக்கையில் சரிவு ஏற்படவும் - தண்டனைகளிலிருந்து விடுபடும் போக்கு தொடர்வதற்குமே வழிகோலும்.

மேலும், பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கான உள்ளக மற்றும் கலப்பு பொறிமுறைகளை முற்றாக நிராகரிக்கிறோம். இனவழிப்புப் பிரகடனத்தின்கீழ் சர்வதேச நீதிமன்றத்தில் இலங்கை தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கான நடவடிக்கை கள் முன்னெடுக்கப்பட வேண்டும் - என்றும் அந்த அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. (ஐ)

## அரச...

சொந்த இடமான தங்காலைக்கு சென்றார். நேற்று மாலை நேரம் அங்கு சென்றடைந்த மகிந்த ராஜபக்ஷவுக்கு பெருமளவிலான மக்கள் கூடி வரவேற்பு அளித்தனர்.

இதேநேரம், முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன, சந்திரிகா குமாரதுங்க ஆகியோரும் தமது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து நேற்றைய தினம் வெளியேறியிருந்தனர்.

முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகள் - சலுகைகள் சட்டமூலம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் திருத்தி நிறைவேற்றப்பட்டது. இந்த சட்டமூலத்தை சபாநாயகர் அன்றைய தினமே சான்றுரைப்படுத்தியிருந்தார். இதைத் தொடர்ந்தே முன்னாள் ஜனாதிபதிகள் தமது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறினர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## உள்நாட்டு...

நேரில் சந்தித்தபோதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 60ஆவது கூட்டத்தொடரில் இலங்கை குறித்து சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கை தொடர்பில் அதன் ஆணையாளர் வோல்கர் டர்க், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோர் நேற்று சந்தித்தனர்.

இதன்போது அரசாங்கத்தின் நிலைப்பாட்டை அமைச்சர் விஜித ஹேரத் விரிவாக விளக்கினார் என்று வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

## ஆரம்பித்த...

விட்டு வெளியேறி தங்காலைக்கு திரும்புகிறார். இது அனைத்தும் தொடங்கிய இடம். உண்மையான பலம் நமது வேர்களிலிருந்து வருகிறது. பதவிகள் அல்லது சலுகைகளிலிருந்து அல்ல என்பதை நினைவூட்டுகிறது." - என்றார். (ஐ)

## நான்...

அண்மையில், ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க கச்சதீவுக்கு பயணம் மேற்கொண்டிருந்தமை தமிழ்நாடு அரசியலில் பெரும் விவாதத்தை கிளப்பிவிட்டுள்ள நிலையில் சீமான் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். (ஐ)

## குழப்பங்களால்...

குழப்பத்தை ஏற்படுத்தியிருந்தனர்.

நேற்று சபை கூடியதைத் தொடர்ந்து எதிர்க்கட்சி பிரதம கொறடா கயந்த கருணாதிலக, நம்பிக்கையில்லா பிரேரணை நிராகரிக்கப்பட்டமைக்கு காரணமான சட்ட மா அதிபர், பாராளுமன்ற செயலாளரின் அறிக்கைகளை கோரினார்.

அவருக்கு பதிலளித்த சபாநாயகர், "அறிக்கைகளை பரிசீலித்த பின்னர் எனது நிலைப்பாட்டையே அறிவித்தேன்" - என்று கூறினார்.

இதன்போது, எதிர்க்கட்சி தலைவர் சஜித் எழுந்து உயிர்த்த ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பதற்கானதே நம்பிக்கையில்லா பிரேரணை. எனவே, அதனை விவாதத்துக்கு எடுத்துக் கொள்ள வேண்டும் - என்றார்.

அவரைத் தொடர்ந்து எதிர்க்கட்சி எம். பிக்கள் பலரும் நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுக்குமாறு வலியுறுத்தினர்.

இதன்போது, சபை முதல்வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க நம்பிக்கையில்லா பிரேரணையை விவாதத்துக்கு எடுக்கக்கூடாது என்று வலியுறுத்தினார். அப்போது, அவரை உரையாற்ற விடாது கோஷங்களை எழுப்பி எதிர்க்கட்சியினர் குழப்பம் ஏற்படுத்தினர்.

இதனால். சபையை கட்டுப்படுத்த முடியாமல் சபாநாயகர், சபை நடவடிக்கையை 10 நிமிடங்களுக்கு ஒத்திவைப்பதாக தெரிவித்து சபை நடவடிக்கைகளை காலை 9.50 மணிக்கு ஒத்திவைத்தார்.

பின்னர் பாராளுமன்றம் மீண்டும் 10.05 மணிக்கு கூடியது. இதன்போது அமைச்சர் பிமல் ரத்நாயக்க மீண்டும் எழுந்து, பிரதி அமைச்சர் அருண ஜயசேகரவுக்கு எதிரான நம்பிக்கை யில்லா பிரேரணையை முறையாகக் கொண்டு வந்தால், அது தொடர்பில் விவாதிப்பதற்கு நாங்கள் தயார் - என்று கூறினார். எனினும், அவரின் கருத்தை எதிர்க்கட்சியினர் ஏற்காது கோஷமிட்டனர்.

இதைத் தொடர்ந்து, சபாநாயகர் இந்த விடயங்களை கட்சிகளின் தலைவர்கள் கூடித் தீர்த்துக் கொள்வோம் என்று கூறி சபை நடவடிக்கையை முன்னெடுக்க முயன்றார்.

ஆனால், சபையின் முதல்வர் அதனை கருத்தில் கொள்ளாமல் கருத்துகளை முன்வைத்தார். அவரின் கருத்துக்கு எதிர்ப்பு கிளம்பியது. இதன்போது, சபை முதல்வர் பிமல் ரத்நாயக்க எதிர்க்கட்சி உறுப்பினர்களை பார்த்து சபைக்கு பொருத்தமில்லாத வார்த்தையை பயன்படுத்தினார்.

அவர் தனது வார்த்தையை மீளப்பெறவேண்டும் என்றுகூறி எதிர்க்கட்சியினர் சபை நடுவே வந்தனர்.

சபாநாயகர் எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஆசனங்களுக்கு செல்லுமாறு பல தடவைகள் தெரிவித்தார். ஆனாலும், எதிர்க்கட்சியினர் தகாத வார்த்தையை மீளப்பெறுமாறு தொடர்ந்து வலியுறுத்தினர்.

இதன்போது சபாநாயகர், பிமல் ரத்நாயக்கவை பார்த்து, குறித்த தகாத வார்த்தையை மீளப்பெறுங்கள் - என்று கூறினார்.

என்றாலும் அமைச்சர் பிமல், அது தொடர்பில் கண்டுகொள்ளாது, சபாநாயகரை பார்த்து, இந்த மோசமான முறைமைக்கு இடமளிக்காமல் சபை நடவடிக்கையை கொண்டு செல்லுங்கள் என்று கூறினார்.

இதைத் தொடர்ந்து, சபாநாயகர் சபை நடவடிக்கையை முன்னெடுத்தபோது, எழுந்த எதிர்க்கட்சி பிரதம கொறடா கயந்த கருணாதிலக, சபை முதல்வரின் அந்த தகாத வாரத்தையை ஹன்சார்ட்டில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் - என்று கூறினார்.

அதற்கு சபாநாயகர் தகாத வார்த்தைகளை நீக்க நடவடிக்கை எடுப்பேன் - என்றார்.

இதைத் தொடர்ந்து சபை நடவடிக்கை தொடங்கியபோதும் கூச்சல் குழபங்கள் காணப்பட்டன. அத்துடன், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் கேள்விகளுக்கு அமைச்சர்கள் பதிலளிக்காமல் கால அவகசாம் கோரினர். ஒரேயோர் ஆளும் கட்சி உறுப்பினரின் கேள்விக்கு மாத்திரம் பதிலளிக்கப்பட்டது. (ஐ)

## சந்திரசேகருக்கு....

அமைச்சு பதவியை துறப்பீர்களா என்று யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அர்ச்சுனா கேள்வி எழுப்பியுள்ளார்.

நேற்றைய தினம் பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

மேலும், கடற்றொழில் அமைச்சின் கீழ் பல ஊழல் குற்றச்சாட்டுகள் பொது மக்களால் முன்வைக்கப்படுகின்றபோதும் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் அது தொடர்பில் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்காதது ஏன்?

நீரியல் வளங்கள் துறை அமைச்சராக சந்திரசேகர் பொறுப்பேற்ற பின் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கைகள் குறித்து கரிசனை கொள்ளவில்லை என்பது மக்களது முறைப்பாடாகும்.

இதுவரை குறித்த அமைச்சின்கீழ் பதியப்பட்ட வழக்குகள் எத்தனை என்பதை தெளிவுபடுத்த முடியுமா?, கடல் அட்டை பண்ணை விவகாரத்திலும் பல ஊழல்கள் இடம்பெற்றுள்ளன என்று மக்கள் முறையிடுகின்றனர். இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவில்லை. இந்நிலையில் தங்களின் பினாமிகளின் பெயரில் கையூட்டல் இடம்பெறுகின்றது. இதற்கான ஆதாரங்களை சபையில் சமர்ப்பித்தால் அதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள முடியுமா? குறிப்பாக, அமைச்சர் சந்திரசேகர் அமைச்சுப் பதவியை ஏற்ற பின்னர் வடக்கு மாகாண கடற்றொழில் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட இடமாற்றங்கள் குறித்த விவரங்களை வெளிப்படுத்த முடியுமா?

அமைச்சர் சந்திரசேகர்மீது ஊழல் குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டால் அவர் பதவி விலகத் தயாரா - என்று அர்ச்சுனா கேட்டார்

இந்நிலையில் அர்ச்சுனாவால் முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் குறித்து பதிலளிப்பதற்கு இரண்டு வார கால அவகாசம் வேண்டும் என அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் பாராளுமன்றில் பதில் அளித்தார். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# ஈஸ்டர் தாக்குதல் விசாரணைக்கு அரசாங்கமே தடை ஏற்படுத்தியது

## திஸ்ஸ அத்தநாயக்க குற்றச்சாட்டு

கொழும்பு, செப். 12

**ஏப்ரல் 21 தாக்குதல் விசாரணைகளை வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுப்பதற்கு அரசாங்கமே தடையை ஏற்படுத்தியிருப்பதாக ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்துள்ளார்.**



கொழும்பிலுள்ள ஐக்கிய மக்கள் சக்தி தலைமையகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போது அவர் இந்த கருத்தை வெளியிட்டார்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அருண ஜயசேகர பதவியிலிருக்கும் போது உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விசாரணைகளை நியாயமாக முன்னெடுக்க முடியுமா என்ற சந்தேகம் தமக்கு உள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டார்.

ஏப்ரல் 21 விசாரணைகளின்போது அருண ஜயசேகர சாட்சியமளித்திருக்கின்றார். அவருக்கு கீழ் பணியாற்றிய அதிகாரிகளும் சாட்சியளித்திருக்கின்றனர்.

இந்தநிலையில், குறித்த விசாரணைகளை முறையாக முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்கவேண்டும் என அவர் நினைத்தால், நிச்சயம் பதவி விலகியிருப்பார் என திஸ்ஸ அத்தநாயக்க சுட்டிக்காட்டினார்.

எனினும், அருண ஜயசேகர அதைச் செய்யாததன் காரணமாகவே எதிர்க்கட்சிகள் அவருக்கெதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை சமர்ப்பித்துள்ளதாக திஸ்ஸ அத்தநாயக்க குறிப்பிட்டுள்ளார்.

தற்போது நம்பிக்கையில்லாப் பிரேரணையும் நிராகரிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் குறித்த பக்கசார்பற்ற விசாரணைகளுக்கு சவால் ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். (அ)

# துமிந்தவுக்குப் பொதுமன்னிப்பு வழங்கினால் எதிர்க்கமாட்டேன்!

## ஹிருணிகா பிரேமச்சந்திர

கொழும்பு, செப். 12

துமிந்த சில்வாவுக்கு ஜனாதிபதி பொதுமன்னிப்பு வழங்கப்பட்டால்கூட இனிமேல் அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கப்போவதில்லை என்று முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிக்கா பிரேமச்சந்திர தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு-

துமிந்த சில்வாவை ஜனாதிபதி பொதுமன்னிப்பின்கீழ் மட்டுமே விடுதலை செய்ய முடியும். அவ்வாறு செய்தால் கூட அது எனக்கு பிரச்சனை இல்லை.

இவ்விவகாரம் தொடர்பில் எனக்கு தற்போது கோபம் மற்றும் வைராக்கியம் இல்லை. எனவே, அந்நபரை விடுதலை செய்தாலும் ஒன்று, செய்யாவிட்டாலும் ஒன்று. எனக்கு அதில் எவ்வித தாக்கமும் இல்லை.

அந்நபர் மீது எனக்கு இருந்த வைராக்கியம் தற்போது இல்லை என்றே தோன்றுகின்றது. தற்போதைய ஜனாதிபதியோ அல்லது இனிவரும் ஜனாதிபதியோ அவருக்கு மன்னிப்பு வழங்கினால் அப்பிரச்சினையை நான் பெரிது படுத்தப்போவதில்லை.

பொதுமன்னிப்புக்காக எனது தரப்பில் ஒத்துழைப்பு தேவைப்பட்டால் அதனை வழங்குவதற்கும் தயார்-என்றார். (அ)

# நகர அபிவிருத்தி அதிகாரசபையின் முன்னாள் பணிப்பாளர்கள் கைது!

கொழும்பு, செப். 12

நகர அபிவிருத்தி அதிகார சபையின் இரண்டு முன்னாள் பணிப்பாளர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கமைய நகர அபிவிருத்தி அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளர் நாயகம் சுமேத ரத்நாயக்க மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் காணிகளுக்கான முன்னாள் பணிப்பாளர் ஆகியோர் கைதாகியுள்ளனர்.

இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவால் அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (அ)

# பாதாள உலகக் குழுக்களை ஒழிக்க கோட்டாவிடம் பாடம் கற்கவேண்டும்!

## எஸ்.பி.திஸாநாயக்க கூறுகிறார்

கொழும்பு, செப். 12

பாதாள உலகக்குழு செயற்பாடுகளை இல்லாதொழிப்பது தொடர்பில் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் பாடம் கற்றுக் கொள்ள வேண்டுமென முன்னாள் அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

கோட்டாபய ராஜபக்ஷ பாதுகாப்புச் செயலாளராக கடமையாற்றிய காலத்தில் அவர் பாதாள உலகக் குழு செயற்பாடுகள் மற்றும் போதைப் பொருளை முற்று முழுதாக இல்லாதொழித்தார்.

பாதாள உலகக் குழு படுகொலைகளை இல்லாதொழிப்பது எவ்வாறு என்பதை கோட்டாபய நாட்டுக்கு செய்து காட்டினார்.

மிகவும் கடுமையான முறையில் அவர் இந்த நடவடிக்கையை மேற்கொண்டார்.

போர், பாதாள உலகக் குழு மற்றும் போதைப் பொருள் என்பனவற்றை இல்லாதொழிப்பதில் கோட்டாபய சிறந்த தலைவர்.

எனினும் கோட்டாபய இந்த நாட்டில் மிகவும் தோல்வியடைந்த ஓர் ஜனாதிபதி-என்றார். (அ)

# காணி, சுற்றாடல் அமைச்சர்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்று அழைப்பு!

கொழும்பு, செப். 12

நாட்டின் நிலங்களை நிர்வகிக்க தேசிய திட்டத்தை வெளியிட உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனு தொடர்பாக, நவம்பர் 28 அன்று நீதிமன்றத்தில் முன்னிலையாகுமாறு காணி அமைச்சர், சுற்றாடல் அமைச்சர் மற்றும் பல தரப்பினருக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அழைப்பாணை அனுப்பியுள்ளது.

சுற்றுச்சூழல் நீதி மையத்தால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டது.

இந்த மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் தம்மிக கணேபொல மற்றும் ஆதித்ய பட்டபெந்தி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மனுதாரர் தரப்பில் முன்னிலையான சட்டத்தரணி ரவீந்திரன் தாபரே, நீதிமன்றத்தில் ஆதாரங்களைச் சமர்ப்பித்து, நாட்டில் நில முகாமைத்துவத்துக்கான தேசிய திட்டம் இல்லாததால் பல சிக்கல்கள் எழுந்துள்ளதாக சுட்டிக் காட்டினார்.

விவசாய நடவடிக்கைகள், காடுகள், சதுப்பு நிலங்கள், குடியிருப்புகள் போன்றவற்றுக்கு ஒதுக்கப்பட வேண்டிய நிலங்கள் மற்றும் அவற்றின் எல்லைகள் முறையாக அடையாளம் காணப்பட்டு ஒதுக்கப்படாததால் நாட்டில் பல சுற்றுச்சூழல் மற்றும் பிற நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாக சட்டத்தரணி சுட்டிக் காட்டினார்.

நாட்டில் உள்ள நிலங்களிலிருந்து முறையான நன்மைகளைப் பெற முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளதாக சட்டத்தரணி குறிப்பிட்டார்.

ஒரு தீவு நாடான இலங்கை, தனக்குச் சொந்தமான நிலங்களிலிருந்து அதிகபட்ச நன்மைகளைப் பெறுவது அவசியம் என்றும், முறையான நில முகாமைத்துவ திட்டம் இல்லாததால், சரியான உற்பத்தி இலக்குகளை அடைய முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றும் சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

முன்வைக்கப்பட்ட உண்மைகளைக் கருத்தில் கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்ற அமர்வு, இந்த விவகாரத்தில் பிரதிவாதிகளாகப் பெயரிடப்பட்டுள்ள காணி அமைச்சர், சுற்றாடல் அமைச்சர் மற்றும் வன ஜீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை நவம்பர் 28 ஆம் திகதி நீதிமன்றத்தில் தங்கள் உண்மைகளை முன்வைக்க உத்தரவிட்டு, அழைப்பாணை அனுப்ப உத்தரவிட்டது. (அ)

# மாணவர்களை ஏற்றி செல்லும் வாகனங்களுக்குக் கட்டுப்பாடு!

கொழும்பு, செப். 12

பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்குப் புதிய விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை அறிமுகப்படுத்துவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக போக்குவரத்து அமைச்சுடன் இணைந்து, இந்த விசேட கூட்டுத்திட்டம் செயல்படுத்தப்படுவதாக கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

கடந்த சில நாட்களாக, பாடசாலை போக்குவரத்து வாகனங்களுடன் தொடர்புடைய பல விபத்துகள் பதிவாகியுள்ளன. இந்த விபத்துகளில் மாணவர்கள் பலர் காயமடைந்துள்ளனர்.

இந்தநிலையில், பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வாகனங்களுக்கும் பாடசாலை தொடர்பான நடவடிக்கைகளுக்கும் அமைச்சு பொருத்தமான பரிந்துரைகளை வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைய, பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் அனைத்து வாகனங்களும், புதிய விதிமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டிருக்குமென கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்தார். (அ)

# வங்கி அட்டை மூலம் பஸ் கட்டணம் செலுத்தும் வாய்ப்பு மிகவிரைவில்!

கொழும்பு, செப். 12

பஸ் கட்டணங்களை வங்கி அட்டைகள் மூலம் செலுத்துவதற்கான முறைமை ஒன்று உருவாக்கப்படும் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

டிஜிற்றல் பொருளாதார மாதத்துக்கு இணையாக, செயற்கை நுண்ணறிவு தொடர்பான உத்தியோகபூர்வ இணையத்தளம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்படும் எனவும் ஹரிணி அமரசூரிய குறிப்பிட்டார்.

பாராளுமன்றில் நேற்று முன் தினம் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனை கூறினார்.

டிஜிற்றல் மயமாக்கலால் வலுவூட்டப்பட்ட நாடாக இலங்கையை மாற்றி அமைக்கும் பயணத்தைத் துரிதப்படுத்துவதற்கான தேசிய நிகழ்ச்சித் திட்டத்தின் ஒரு அங்கமாக செப்ரெம்பர் மாதம் டிஜிற்றல் பொருளாதார மாதமாகப் பெயரிடப்பட்டுள்ளதாகப் பிரதமர் கூறினார்.

2030ஆம் ஆண்டளவில் நாட்டின் டிஜிற்றல் பொருளாதாரத்தை அமெரிக்க டொலர் 15 பில்லியனாக அதாவது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 12 வீதமாக டிஜிற்றல் பங்களிப்பை விரிவுபடுத்துவதற்கான அரசாங்கத்தின் சவாலான இலக்கை அடைவதுடன், டிஜிற்றல் துறையில் ஏற்றுமதியை அமெரிக்க டொலர் 5 பில்லியனாகவும், டிஜிற்றல் துறைசார் தொழிலாளர்களின் எண்ணிக்கையை இரண்டு இலட்சமாகவும் அதிகரிக்க எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.09.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org